## எம்பிலிபிட்டிய பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 27 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினது ஆரம்ப நீதிமன்றத் தண்டப் பண நிலுவை ரூபா 5,143,313 ஆகும். முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப் பணமாக பெற்ற தொகை ரூபா 6,191,111 ஆகும். இதற்கமைய, கடன்பட்டோர் மீதியிலும் கூடிய பெறுவனவாகிய ரூபா 1,047,798 திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படாமையால் ஆண்டின்

இறுதியில் நீதிமன்றத் தண்டப் பண நிலுவை அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்குக் கொடுப்பனவு செய்வதற்காக 2012 ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதிக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தால் சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தில் ரூபா 628,558 சங்கத்திற்கு 2013 ஏப்ரல் 09 அன்று வழங்கப்பட்டிருந்தது. அம் முத்திரைக் கட்டண வருவாய் மீளாய்வாண்டின் வருவாயிலப்படாததால் மீளாய்வாண்டின் வருவாய் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 273,956 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தமுடியவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,267,712 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,572,111 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) இருபத்தேழு செலவின விடயங்களுக்கான ரூபா 555,400 மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. 7 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,620,000 நிதியேற்பாட்டில் ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 411,000 மாற்றஞ்செய்யப்பட்டதன் பின்னர் செலவிடப்படாது மேலும் எஞ்சியிருந்த தொகை ரூபா 1,209,000 ஆகும்.

(ஆ) 2010 முதல் தொடர்ந்து வரும் ரூபா 3,116,279 பெறுமதியான 20 கடன் கொடுத்தோர் மீதியை பதிவழிப்பதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 1988 முதல் 2012 இறுதி வரை ரூபா 1,958,488 கூட்டுத்தொகையுடைய முற்பணம் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,613 | 2,562 | 4,354 |
| (ii) | குத்தகை வாடகை | 6,155 | 5,454 | 368 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 996 | 434 | - |
| (iv) | பிற வருவாய் | 33,749 | 39,468 | 5,900 |

**2.3.2 வாரச் சந்தை வரி**

பனாமுர வாரச் சந்தை 2012 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட கேள்விகள் கோரப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளருடன் ரூபா 1,442,800 க்கான உடன்படிக்கை 2011 டிசெம்பர் 23 அன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, 2012 ஆம் ஆண்டில் ஜனவரி, பெப்ரவரி ஆகிய 2 மாதங்களில் மாத்திரம் சந்தை நடாத்தப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்கான சந்தை வரியாக அறவிடப்பட்ட தொகை ரூபா 150,233 ஆகும். கேள்வியானரால் சந்தையை நடாத்த முடியாமையால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுச் சபையால் மார்ச் முதல் டிசெம்பர் வரை ரூபா 451,700 சேகரிக்கப்பட்டிருந்தது. சபை பெறக்கூடியதாகவிருந்த சந்தை வரியாகிய ரூபா 840,867 சபைக்குக் கிடைக்காது போயிற்று

கேள்வியாளர் உடன்படிக்கையை மீறியபோதும், உடன்படிக்கையை இரத்துச் செய்த கேள்வியாளருக்கு எதிராக சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன் கணக்காய்வுத் தினமான 2013 ஆகஸ்ட் 26 அன்றும் உடன்படிக்கை மீறலால் ஏற்பட்ட பிணை வைப்பாகிய ரூபா 304,132 மூலம் இழப்பை ஈடுசெய்வதற்கும் அதனைச் சபையின் நிதியத்தில் செலவு வைப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,277,956 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,781,540 |

### 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

2009 செப்டெம்பர் 29 அன்று ரூபா 306,538 செலவில் பழுதுபார்க்கப்பட்ட வைபிரேட்டின் சுருள் பழுதுபார்க்கப்பட்டு 4 ஆண்டுகள் பூர்த்தியாகியபோதும், கணக்காய்வுத் தினமான 2013 செப்டெம்பர் 03 ஆந் திகதியளவிலும் அதனைப் பெற்றுச் சபையின் பாவனையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

மேற்படி சொத்தினது பழுதுபார்த்தல் செலவைக் கொடுப்பனவு செய்வது தாமதம் ஆகியமையால் சபைக்கு எதிராக பழுதுபார்த்தலை மேற்கொண்ட நிறுவனம் தொடுத்த வழக்குக் கட்டணமாக 2012 டிசெம்பரில் சபையால் ரூபா 21,500 கொடுப்பனவு செய்ய வேண்டியதாயிற்று.

### 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 மார்ச் 26 அன்று சபை பெற்றுக்கொண்ட திரைச்சீலைக்காக ரூபா 90,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறையின் முறையற்ற தன்மை தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரது சீஎல்ஜீ/0107 ஆம் இலக்க 2011 ஒக்டோபர் 27 ஆந் திகதிய கடித அறிவுறுத்தலின்படி முறையான பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்